# Albert Camus' Existentialist Perspective on the Novel Geethari

**S. Ponravid**
*Ph.D. Research Scholar, Department of Tamil*
*Erode Arts and Science College, Erode*

**Dr. A. Ramalingam**
*Associate Professor, Department of Tamil*
*Erode Arts and Science College, Erode*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346671

**Abstract**
*A novel is considered an important medium for expressing various social issues. Literary critics generally argue that a novel should be read in the context of the period in which it was written, and this viewpoint is valid. At the same time, some world thinkers have proposed general philosophical ideas about humanity. Reading a novel from such philosophical perspectives allows us to see not just the issues of a particular society or community, but also how the novel connects with the broader concerns of human life. From this viewpoint, S. Tamizhchelvi's novel Geethari can be approached differently. On a superficial reading, the novel may seem to depict only the Idaiyar community. However, when read through the existentialist philosophy of Albert Camus, particularly his concept of "Absurd" (L'Absurde), the sufferings of the Idaiyar people are seen not merely as social or community problems but as part of the larger human existential crises. This article explores S. Tamizhchelvi's Geethari from Albert Camus' existentialist perspective.*
***Keywords:*** *Albert Camus, Existentialism, Philosophy, Absurdism, Geethari*

**References**
1. S.V. Rajadurai – Existentialism and Marxism, Vidiyal Publications, Coimbatore – 641015.
2. Gnan, S. – Opposing Perspectives, Kavya Publications, Chennai – 24.
3. S. Tamizhchelvi – Geethari, New Century Book House (P) Ltd., Chennai.
4. The myth of Sisyphus, penquin books ltd
5. Fear and trempling, penquin books ltd
6. Jean-Paul Sartre (Being and Nothingness -1943), (rouldge classics edition)
7. Friedrich Nietzsche (Twilight of the Idols- 1889) penguin classics

# ஆல்பர்ட் காம்யுவின் இருத்தலியல் பார்வையில் கீதாரி நாவல்

***ச. பொன்ராவிட்***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

***முனைவர் அ. ராமலிங்கம்***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

***ஆய்வுச் சுருக்கம்***

*நாவல் என்பது சமூகத்தில் தோன்றும் பல்வேறு பிரச்சனைகளை வெளிப்படுத்தும் முக்கிய ஊடகமாகக் கருதப்படுகிறது. பொதுவாக ஒரு நாவலை, அது எழுதப்பட்ட காலச் சூழலோடு இணைத்து வாசிக்க வேண்டும் என்பது இலக்கிய விமர்சகர்களின் கருத்தாகும். இக்கருத்து நியாயமானதுதான். ஆனால் அதே சமயம் உலக சிந்தனையாளர்கள் சிலர், மனிதனைப் பற்றிய பொதுவான தத்துவங்களை முன்வைத்துள்ளனர். அவ்வகை தத்துவக் கோணங்களில் நாவல்களைப் படித்தால், ஒரு சமூகத்தையோ, குழுவையோ மட்டுமே சார்ந்து கட்டமைக்கப்பட்ட நாவல், மனித வாழ்வின் ஒட்டுமொத்த பிரச்சனைகளோடு எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்த முடியும். அத்தகைய பார்வையில் சு.தமிழ்ச்செல்வி அவர்களின் கீதாரி நாவலை அணுக முடிகிறது. சாதாரணமாகக் கொண்டால், இந்நாவல் இடையர் சமூகத்தைச் சித்தரிக்கும் படைப்பாக மட்டுமே தெரிகிறது. ஆனால் இருத்தலிய சிந்தனையாளரான ஆல்பர்ட் காம்யுவின் "அபத்தம்"* (Absurd) *என்ற தத்துவக் கோணத்தில் வாசித்தால், இடையர் மக்களின் துயரங்கள் தனிப்பட்ட சமூகச் சூழலின் பிரச்சனைகளைத் தாண்டி, ஒட்டுமொத்த மனித வாழ்வின் அபத்தங்களோடு இணைந்து வெளிப்படுவதை உணர முடிகிறது. சு.தமிழ்ச் செல்வியின் கீதாரி நாவலை, ஆல்பர்ட் காம்யுவின் இருத்தலியக் கோணத்தில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

***திறவுச்சொற்கள்:*** *ஆல்பர்ட் காம்யு, இருத்தலியல், இருப்பியல், அபத்தம், அப்சர்டிசம், கீதாரி*

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தில் பெண்ணிய குரலை வலுப்படுத்திய சிறந்த படைப்பாளிகளில் ஒருவராக சு. தமிழ்ச்செல்வி விளங்குகிறார். அவருடைய கீதாரி நாவல், இடையர் சமூக வாழ்க்கை, பாலியல் சுரண்டல், பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள், வறுமை மற்றும் குடும்பத்தினுள் நடக்கும் அதிகாரப் போட்டிகளை ஆழமாக சித்தரிக்கிறது. கீதாரி நாவலில் கரிச்சா, சிவப்பி, சேது, வெள்ளைச்சாமி, ராமு கீதாரி போன்ற பாத்திரங்கள் வாழ்க்கையின் அர்த்தமின்மையைச் சந்திக்கும் விதமும் அதை எதிர்கொள்ளும் விதமும் உலக இலக்கியத்தில் பிரபலமான தத்துவஞானி ஆல்பர்ட் காம்யுவின் (Absurdism) "அபத்தவியல்" சிந்தனையோடு ஒன்றியுள்ளதை வெளிக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆல்பர்ட் காம்யுவின் இருத்தலியல் சிந்தனை**

காம்யு *(1913-1960)* பிரெஞ்சு இலக்கியத்திற்கும் தத்துவத்திற்கும் மிகப் பெரிய பங்களிப்பு செய்தவர். ஜீன்-பால் சார்த்ரே போன்ற இருப்பியலாளர்கள் "வாழ்க்கை அர்த்தமற்றது, ஆனால் மனிதன் தனது செயலில் அர்த்தத்தை உருவாக்க வேண்டும்" என கூறுகின்றனர். காம்யு அதே

நிலையை ஒப்புக்கொண்டாலும், அவர் அதை "Absurdism" என்ற தனி சிந்தனையாகவே முன் வைக்கிறார். இவரது கருத்துகள் இருத்தலியல் தத்துவத்தை ஒட்டி இருந்தாலும் தன்னை இருத்தலியலாளர் என்று கூறுவதை இவர் ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக இவர் தன்னை "Absurdist" என்றே அடையாளப்படுத்திக் கொள்கிறார். இருப்பியலாளர்கள் வாழ்க்கையில் அடிப்படையான அர்த்தம் இல்லாதபோதும், மனிதன் சுதந்திரத் தீர்மானங்களின் மூலம் அர்த்தத்தை உருவாக்கலாம்சு என்கிறார்கள். காம்யு மனிதன் எப்போதும் அர்த்தத்தைத் தேடுகிறான், ஆனால் பிரபஞ்சம் எப்போதும் மௌனமாக இருக்கும், இந்த முரண்பாடு தான் Absurd எனப்படுகிறது. "அர்த்தத்தைத் தேடும் ஆசையையும், உலகின் அர்த்தமின்மையையும் இணைத்துக் கொண்டே வாழ வேண்டும். அதுதான் உண் மையான சுதந்திரம். சு என்கிறார் காம்யு.

## Absurd நிலைமை

காம்யுவுக்கு முன்னால் "Absurd" என்ற சொல்லை கீர்கோகார்டே பயன்படுத்தினார். கீர்கோகார்ட், தஸ்தவஸ்கி, நீட்சே, சார்த்தர், காம்யு ஆகிய அறிஞர்கள் வாழ்க்கையின் அபத்தம் பற்றி பேசுகிறார்கள். இவர்கள் அனைவருமே அபத்தம் பற்றி பேசினாலும் சிறு புள்ளியில் வேறுபடுகின்றன. கீர்கோகார்ட், தஸ்தவஸ்கி ஆகிய இருவரும் அபத்தம் நிறைந்த இந்த வாழ்க்கைக்கு கடவுள் வழியாக அர்த்தத்தை தேடினார்கள். நீட்சே, சார்த்தர், காம்யு ஆகிய மூவரும் கடவுளை மறுத்து மனிதனே அர்த்தத்தை காண வேண்டும் என கூறினார்கள். மனிதன் தன் வாழ்விற்கான அர்த்தத்தை, தேடுகிறான். ஆனால் பிரபஞ்சம் அதற்கு எந்தவிதப் பதிலும் தரவில்லை. இந்த முரண்பட்ட நிலையையே Absurd (அபத்தம்) எனப்படுகிறார் காம்யு. அபத்தம் நிறைந்த இந்த வாழ்க்கையில் அர்த்தம் தேடும் வழிகளில் Suicide> Leap of Faith, Revolt என மூன்று வழிகளை பற்றியும் அந்த வழிகள் பற்றய தனது விமர்சனத்தையும் காம்யு the myth of Sisyphus என்ற நூலில் பேசுகிறார்.

## தற்கொலை (Suicide)

வாழ்க்கையின் அபத்த்தை உணர்ந்ததும் மனிதன் அதை வாழ மறுத்து உயிரை மாய்த்துக் கொள்கிறான். வாழ்க்கைக்கு எதிரான மனிதனின் இந்த தேர்வு பற்றி நீட்சே "தற்கொலை ஒருவகை ஆறுதல் என்றும், அது பல துன்பங்களிலிருந்து நம்மை விடுவிக்கிறது என்றும் கூறுகிறார்".

"The thought of suicide is a great consolation: by means of it one gets through many a dark night"

Friedrich Nietzsche (Twilight of the Idols- 1889)

ஜான் பால் சார்த்ரே தற்கொலை என்பது பல தேர்வுகளில் ஒன்று, சுதந்திரமான தேர்வு என்றும் கூறுகிறார். அதாவது அபத்தம் நிறைந்த இந்த உலக வாழ்க்கையில், மனிதன் அடுத்த கட்டத்திற்கு நகர பல முடிவுகள் இருக்கின்றன அதில் ஒன்று தற்கொலை ஆகும். அதில் தற்கொலை எனும் முடிவை தேர்ந்தெடுப்பது அவனின் சுதந்திரம் என்று கூறுகிறார்.

Suicide is one choice among others but it is still a choice of freedom

Jean-Paul Sartre (Being and Nothingness -1943)

காம்யு தனது the myth of sisyphus புத்தகத்தில் "உண்மையில், தத்துவத்தில் ஒரே ஒரு பெரிய பிரச்சனை மட்டுமே உள்ளது - அது தற்கொலை".

There is but one truly serious philosophical problem-and that is suicide

Albert Camus (The Myth of Sisyphus 1942)

அதாவது, வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லையெனில் வாழ்வது தேவையா? அல்லது தற்கொலை செய்ய வேண்டுமா? - இந்தக் கேள்வியே தத்துவத்தின் அடிப்படை என்று அவர் கருதுகிறார். தற்கொலை என்பது தீர்வல்ல, அது அபத்தத்தில் இருந்து தப்பிக்கும் ஓட்டம் என்று காம்யு கருதுகிறார்.

**நம்பிக்கை மீதான தாவுதல் (Leap of Faith)**

இருத்தலிய அறிஞர்களான கிர்கோகார்ட் மற்றும் தஸ்தவஸ்கி போன்றோர் அபத்தம் நிறைந்த இந்த வாழ்க்கையில் கடவுளை அடைவதே ஒரே தீர்வு என்றனர். அர்த்தமற்ற இந்த வாழ்க்கைக்கு கடவுள் வழியாக அர்த்தத்தை தேடினார்கள். தர்க்க ரீதியாகவோ, அறிவின் மூலமோ கடவுளை அடைவது என்பது இயலாது. அப்பொழுது மனிதன் தர்க்கத்தை விட்டு நம்பிக்கைக்கு தாவ வேண்டியுள்ளது. தர்க்க ரீதியாக பார்த்தால் கடவுளை நோக்கிய சில சடங்குகள் அபத்தமாக இருக்கும். இதனை கியர்கேகார்ட் "நம்பிக்கை என்பது அபத்தத்தின் வழியாக கடவுளின் கரங்களில் குதித்தல்" என்கிறார்.

"In faith there is a leap, by virtue of the absurd, into the arms of God."

Soren Kierkegaard ( Fear and Trembling 1843)

கியர்கேகார்டின் இந்த கருத்தினை காம்யு "philosopical suicide" என்று விமர்சிக்கிறார். அபத்த நிலையை நேரடியாக ஏற்காமல் கடவுள் நம்பிக்கை வைத்து அதிலிருந்து தப்பும் விதமாக இருப்பதால் இதனை ஒரு "Philosopical Suicide" என்று கருதுகிறார்.

**எதிர்த்து வாழ்தல் (Revolt)**

வாழ்க்கையின் அர்த்தமின்மையை உணர்ந்து, அதற்கு அடங்கி விடாமல் எதிர்த்து நிற்பதே வாழ்க்கையை மதிப்புமிக்கதாகவும் கண்ணியமானதாகவும் ஆக்குகிறது என காம்யு சொல்கிறார்.

The revolt gives life its value. Spread out over the whole length of a life, it restores its majesty to that life

Albert Camus's The Myth of Sisyphus (1942).

மனிதன் ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ச்சி செய்யும் போது, அது தனிப்பட்ட கிளர்ச்சி அல்ல, அனைவரின் சார்பாகவும் நடப்பதாக உள்ளது. காம்யுவின் The Plague (La Pest, 1947) நாவலில், பிளேக் நோயால் பாதிக்கப்பட்டோரின் துயரத்தில், மனிதர்கள் ஒருவருக்கொருவர் துணைநின்று போராடுகிறார்கள். "ஒற்றுமை என்பது கடவுள் அளிக்கும் அர்த்தமல்ல, மனிதர்களே ஒருவருக்கொருவர் அர்த்தமாக இருப்பது" என்கிறார் காம்யு. அர்த்தமற்ற உலகில் மனிதர்கள் ஒன்றோடொன்று கொண்ட உறவுகள் "Solidarity" மட்டுமே வாழ்வுக்கு சிறு அர்த்தம் தருகின்றன. அன்பு, பகிர்வு, கருணை ஆகியவை மனிதரை நிலைநிறுத்துகின்றன என்கிறார்.

**கீதாரி நாவலில் அப்சர்டிசம்**

**அபத்தம் (Absurd)**

கீதாரி நாவலின் கதை கரிச்சா, சிவப்பி என்ற இரட்டைப் பெண்களைச் சுற்றியே நகர்கிறது. மனநலம் குன்றிய ஒரு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்து இறந்து விட, ராமு கீதாரி அவற்றைத் தத்தெடுத்து வளர்க்கிறார். சிவப்பியை சாம்பசிவம் என்ற பண்ணையார் வளர்க்க, கரிச்சாவை ராமு கீதாரி தன் வீட்டிலேயே வளர்க்கிறார். வெள்ளைச்சாமி, இருளாயி ஆகியோரும் கதை முன்னேற்றத்தில் முக்கியமானவர்கள். ஆனால் அவர்களின் வாழ்க்கை தொடர்ச்சியான துயரங்களால் நிரம்பியுள்ளது. சிவப்பி வளர்ந்த வீட்டிலேயே பாலியல் துன்புறுத்தலுக்குப் பலியாகி இறுதியில் தற்கொலை செய்கிறாள். கரிச்சா வெள்ளைச்சாமியுடன் திருமணம் செய்து கொண்டாலும், குழந்தையின்மை காரணமாக கணவனின் துரோகம் மற்றும் சமூக ஒடுக்குமுறையைச் சந்திக்கிறாள். இருந்த போதிலும் அவள் தனியாக வாழ்ந்து தனது மகனை வளர்க்கத் தீர்மானிக்கிறாள். பாம்பு கடித்து அவள் உயிரிழந்தாலும், ராமு கீதாரிதான் அவளது மகனை வளர்க்கும் பொறுப்பை ஏற்கிறார்.

இந்தக் கதையில் வெளிப்படும் வாழ்க்கையின் சீரற்ற தன்மை காம்யுவின் அப்சர்டிசத்தோடு ஆழமான ஒற்றுமை பெறுகிறது. மனிதர்கள் விரும்புவது போல எதுவும் நடப்பதில்லை. கரிச்சா எதிர்பார்த்த வாழ்க்கை நிறைவேறாமல் பாம்பு கடித்து

இறப்பது, மனிதன் வாழ்வின் அர்த்தத்தைத் தேடிக்கொண்டிருக்கும்போது பிரபஞ்சம் எந்தவித பதிலும் தராமல் மௌனமாக இருப்பதற்குச் சமமானது. வாழ்க்கையின் சீரற்ற தன்மை, நிகழ்வுகளின் திடீர் மாற்றம் ஆகியவை அப்சர்ட்டின் வெளிப்பாடாகவே பார்க்கப்படுகின்றது.

**தற்கொலை (Suicide)**

சேது மற்றும் சிவப்பியின் தற்கொலை, காம்யுவின் முதலாவது பதிலை நினைவூட்டுகிறது. வாழ்க்கை அர்த்தமற்றது என்பதை உணர்ந்த பிறகு அதனை மறுத்து மரணத்தைத் தேர்வு செய்வது அப்சர்ட்டிற்கு எதிரான ஒரு பதிலாக காம்யு கருதுகிறார். சேது தன் மனைவியை கொன்றுவிட்டு தன் வாழ்க்கையில் வெறுமையை உணர்ந்து தற்கொலை செய்து கொண்டதும் மேலும் சிவப்பியும் தன் வாழ்வின் வலியைத் தாங்க முடியாமல், பாலியல் சுரண்டலால் சோர்ந்து உயிரை மாய்த்துக் கொள்வதும் வாழ்க்கையை மறுக்கும் செயலாகும். இது காம்யுவின் "தற்கொலை" என்ற கருத்தோடு நேரடி ஒற்றுமை பெறுகிறது.

**எதிர்த்து வாழ்தல் (Revolt)**

கரிச்சாவின் வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டது. கணவனின் துரோகத்தையும் சமூகத்தின் ஒடுக்குமுறையையும் தாங்கியும் அவள் தனியாக வாழ்ந்து தனது மகனை வளர்க்க முடிவு செய்கிறாள். வாழ்க்கை அர்த்தமற்றது என்பதை உணர்ந்த பின்பும் அதை எதிர்த்து வாழ்தல், காம்யுவின் "Revolt" சிந்தனையின் வெளிப்பாடாகும். கரிச்சா, காம்யுவின் பார்வையில் சிசிபஸைப் போல, எப்போதும் கல்லை மலைமேல் தள்ளிக் கொண்டே செல்கிறாள். கல் மீண்டும் கீழே உருண்டு விழுந்தாலும், சிசிபஸின் உழைப்பில் தான் சுதந்திரம் இருக்கிறது என்று காம்யு சொன்னது போலவே, கரிச்சாவின் போராட்டத்திலும் பெண்மையின் கண்ணியமும் சுதந்திரமும் வெளிப்படுகிறது.

**ஒற்றுமை (Solidarity)**

நாவலில் முக்கியமான மற்றொரு பரிமாணம் ராமு கீதாரியின் மனிதாபிமானம். ஆதரவற்ற குழந்தைகளைத் தன் பிள்ளைகளைப் போல வளர்க்கும் அவரது செயல், காம்யுவின் "Solidarity" சிந்தனையோடு ஒத்துப்போகிறது. வாழ்க்கை அர்த்தமற்ற தென்பதை உணர்ந்தபின்பும், மனித உறவுகளும் கருணையும் தான் வாழ்வுக்கு சிறு அர்த்தத்தை அளிக்கின்றன என்று காம்யு வலியுறுத்தினார். அதுபோல ராமு கீதாரியின் கருணை, அன்பு, தன்னலமற்ற பண்பு ஆகியவை இந்த நாவலில் அர்த்தமற்ற வாழ்க்கைக்கு சிறு அர்த்தத்தைத் தருகின்றன.

**முடிவுரை**

கீதாரி நாவலை இப்படிப் பார்ப்பதன் மூலம், பெண்களின் துயர வாழ்க்கை ஒரு தனிப்பட்ட சமூகப் பிரச்சனை மட்டுமல்லாமல், உலகளாவிய மனிதநிலையின் பிரதிபலிப்பாகவும் மாறுகிறது. வாழ்க்கையின் அர்த்தமின்மையை காம்யு தத்துவ ரீதியாக வெளிப்படுத்தியது போலவே, சு. தமிழ்ச் செல்வி கிராமப்புற பெண்களின் போராட்ட வாழ்க்கையை கலை ரீதியாக வெளிப் படுத்துகிறார். இந்த இரண்டு நிலைகளும் சிந்திக்கும் போது, கீதாரி நாவல் சாதாரண சமூக நாவலைக் கடந்தும் தத்துவ அடிப்படையில் படிக்கப்படக்கூடியதாக மாறுகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. எஸ்.வி.ராஜதுரை, இருத்தலியமும் மார்க்ஸியமும், விடியல் பதிப்பகம், கோவை-641015.
2. ஞானி, எதிர் எதிர் கோணங்களில், காவ்யா பதிப்பகம், சென்னை -24.
3. சு.தமிழ்ச்செல்வி, கீதாரி, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., சென்னை.